DOI: 10.31357/fhssphd.2010.00062

# EVOLUTION OF THE TAMIL PRESS IN SRI LANKA 1841-1950

by

Mohamed Abdullah Mohamed Rameez

Ph.D 2010

# EVOLUTION OF THE TAMIL PRESS IN SRI LANKA

## 1841-1950

by

Mohamed Abdullah Mohamed Rameez

Thesis submitted to the University of Sri Jayewardenepura for the award of the Degree of Doctor of Philosophy in Mass Communication.

The work described in this thesis was carried out by me under the supervision of Professor Tissa Kariyawasam and Professor S.Thillainathan and a report on this has not been submitted in whole or in part to any university or any other institution for another degree

Signature of the candidate

We certify that the above statement made by the candidate is true and that this thesis is suitable for submission to the University for the purpose of evaluation.

..............................

Prof. Tissa Kariyawasam

Professor emeritus

University of Sri Jayewardenepura

..............................

Prof. S. Thillainathan

Professor emeritus

University of Peradeniya

11 FEB 2011

Since both the examiners, have recommended this thesis to be awarded the PhD, without any amendments, we certify that the degree should be awarded to the candidate.

Prof. Tissa Kariyawasam

Professor emeritus

University of Sri Jayewardenepura

Prof. S. Thillainathan

Professor emeritus

University of Peradeniya

<u>**EVOLUTION OF THE TAMIL PRESS IN SRI LANKA 1841-1950**</u>

**Mohamed Abdullah Mohamed Rameez**

## ABSTRACT

This study deals with the evolution of the Tamil Press in Sri Lanka from 1841 to 1950. The study explores the historical evolution of Press in Sri Lanka, and how it reflected and contributed to religion, social views, politics, literature and language in the Sri Lankan Society. This study is also aimed at evaluating the trend of journalism during that time. Finally, it examines the extent to which Sri Lankan Tamil Press exposed the problems encountered by the Tamil speaking people, namely Tamils, Muslims and upcountry people.

The Press, from its inception, has been playing a significant role in the social development in Sri Lanka. During the British period, Sri Lankan communities having understood its scope attempted to make use of the Press to achieve various purposes. In this backdrop, Tamil and the Sinhalese Press emerged in Sri Lanka before English Press. During the initial period, the major objective of the Press in Sri Lanka was to spread Christianity coupled with accomplishing the information required by the British to carry on their administration. But, the feelings and aspirations of indigenous communities living in the country were not adequately aired in the Press. In order to accomplish that task, newspapers were launched in the indigenous languages. From then, the indigenous Press of Sri Lanka dealt with the religious, cultural, social, educational, economic and political activities.

While the previous researches concentrated mainly on Thinakaran or Virakesari, this study dealing with the Tamil Press as a whole up to 1950 is a pioneer effort in the field.

· A clear explanation of the term 'Press' and an interpretation of the theories of journalism in the present context are attempted.

A detailed discussion of the historical evolution of the Tamil Press, its contribution to social, Economic and cultural development, and to the style of Tamil writing which most of the earlier studies failed to carry out, is attempted in this study.

This study also endeavors to clarify existing problems regarding the names and details of publication of certain newspapers.

This study shows how information based on neutrality and transparency remained a priority of early Press in Sri Lanka while it lacked in page making and type setting.

This study reveals that the early Press popularized classical literature while concentrating in the growth of modern literature. The use of regional dialects, mixed languages, proverbs etc also is discussed.

## நன்றி

பொதுசனத் தொடர்பாடல் துறையில் கலாநிதிப் பட்ட ஆய்வினை இலங்கைப் பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொள்ள வேண்டும் என்ற எனது அவாவினைப் பூர்த்தி செய்த ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக சிங்கள, பொதுசனத் தொடர்பாடல் துறைப் பேராசிரியர் திஸ்ஸ காரியவஸம் அவர்களுக்கும் துறைத்தலைவர் அவர்களுக்கும், அப்பல்கலைக்கழக பட்டக்கற்கைகள் பீடாதிபதி, உறுப்பினர்களுக்கும் மூதவைக்கும் எனது முதல் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வாய்வேட்டின் மேற்பார்வையாளர்களாக பேராசிரியர் திஸ்ஸ காரியவஸம் அவர்களும் பேராசிரியர் சி.தில்லைநாதன் அவர்களும் கடமையாற்றினர். எனது இந்த ஆய்வேடு திருப்திகரமான முறையில் அமைவதற்காக தங்களது புலமைசார் ஆலோசனைகளை தொடர்ச்சியாக அவர்கள் வழங்கி வந்தனர். குறிப்பிட்ட காலத்திற்குள் ஆய்வு முறையியல் தொடர்பாக என்னைப் பல வழிகளில் பயிற்றுவித்து, மிகுந்த வேலைப்பழுக்களுக்கு மத்தியில் எனது பிரதியினைப் பலமுறைகள் திருத்தம் செய்தும் வழிப்படுத்தினர்.

இந்த ஆய்வினை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதற்காக நான் அடிக்கடி ஏற்படுத்திய சிரமங்களைப் பெருமனங் கொண்டு பொறுத்துக் கொண்ட இரு முது பெரும் பேராசிரியர்களுக்கும் எனது மரியாதையினையும் நன்றியினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனது இந்த ஆய்வு முயற்சிக்கு மேலும் பல வழிகளில் ஒத்துழைப்பு வழங்கிய ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக சிங்கள பொதுசன தொடர்பாடல் துறைத் தலைவர் பேராசிரியர் வண. கே.நாரத தேரோ அவர்களுக்கும் பல்கலைக்கழகத்தின் பட்டக் கற்கைகள் பீடத்தினர், பீடப் பதிவாளர், ஊழியர்களுக்கும் எனது நன்றியினைச் சமர்ப்பிக்கின்றேன்.

எனது இந்த ஆய்வு முயற்சி திருப்திகரமான முறையில் அமையவேண்டும் என்று எப்போதும் என்னைத் தூண்டுகின்ற தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி எஸ்.எம்.எம்.இஸ்மாயில் அவர்களுக்கும், அவ்வப்போது ஆலோசனைகளை வழங்கி வழிப்படுத்திய தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவர்

நண்பர்கள், சமூகவிஞ்ஞானத்துறை விரிவுரையாளர்கள் எம்.எம்.பாஸில், ஏ.றமீஸ் ஆகியோருக்கும் எனது மதிப்புமிக்க நன்றி.

இவ்வாய்வுப் பணியினை ஒளியச்சு செய்து உதவிய எனது அன்புத் தம்பி ஏ.ரி.யூனூஸ் அவர்களுக்கும் நண்பர்களுக்கும் எனது குடும்பத்தவர்களுக்கும் மிக்க நன்றி.

# பொருளடக்கம்


Abstract

நன்றி

பொருளடக்கம்

முதலாம் இயல்

அறிமுகம் 01-19

1.1 ஆய்வு அறிமுகம்

1.2 ஆய்வின் நோக்கங்கள்

1.3 ஆய்வு முறையும் வரையறையும்

1.4 இலக்கிய மீளாய்வு

இரண்டாம் இயல்

இதழியல் கொள்கைகளும் இதழியல் வளர்ச்சியும் 20-44

2.1 அறிமுகம்

2.2 தகவல் தொடர்பியல் கோட்பாடுகள்

2.3 அச்சுக்கலை பரம்பல்

2.4 இலங்கையில் அச்சுக்கலை

2.5 பத்திரிகைத்துறையின் முக்கியத்துவம்

2.6 தொழில் முறையாக பத்திரிகை வளர்ந்த வரலாறு

மூன்றாம் இயல்

19ஆம் நூற்றாண்டுத் தமிழ்ப் பத்திரிகைகள் 45-91

3.1 அறிமுகம்

3.2 பத்திரிகைகளின் தோற்றமும் அவற்றின் பிரதான நோக்கும்

3.3 சமூக நோக்கு

3.4 அரசியல் நோக்கு

நான்காம் இயல்

20ஆம் நூற்றாண்டுத் தமிழ்ப் பத்திரிகைகள் 92-155

4.1 அறிமுகம்

4.2 பத்திரிகைகளும் அவற்றின் சமூகப் பின்னணியும்

4.3 பத்திரிகைகளும் அரசியற் பின்னணியும்

ஐந்தாம் இயல்

பத்திரிகை அமைப்பும் விடயங்களும் 156-218

5.1 அறிமுகம்

5.2 பக்க வடிவமைப்பும் உள்ளடக்கமும்

5.3 செய்திகள்

5.4 ஆசிரியர் தலையங்கம்

5.5 கட்டுரைகள்

5.6 கடிதப்பகுதி

5.7 அறிவித்தல்களும் விளம்பரங்களும்

ஆறாம் இயல்

பத்திரிகையும் தமிழ்மொழி வளர்ச்சியும் 219-258

6.1 அறிமுகம்

6.2 மொழி

6.3 இலக்கியம்

6.3.1 செய்யுள்

6.3.2 புனைகதைகள்

ஏழாம் இயல்

மதிப்பீடும் முடிவுரையும் 259-264

பயன்பட்ட நூல்கள் :

பின்னிணைப்புக்கள் :

| | |
|---|---|
| பின்னிணைப்பு - 01 | சுவடிக் கூடத்தில் பட்டியற்படுத்தப்பட்டுள்ள இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைகளின் விபரம். |
| பின்னிணைப்பு - 02 | ஆய்வுக்காக சுவடிக் கூடத்திலும், தனியார் நூலகங்களிலும் பார்க்கக் கிடைத்த இதழ்கள். |
| பின்னிணைப்பு - 03 | தமிழ், ஆங்கில அச்சுப் பெட்டிகளின் மாதிரித் தோற்றம். |
| பின்னிணைப்பு - 04. | I **உதயதாரகை** - ஆபத்துக்குதவிச் சங்கத்தின் வைத்தியசாலை. |
| | II **புதினாலங்காரி** - இலங்கையினின்று ஏற்றப்படுவனவும் இலங்கையிலிறக்கப்படுவனவுமாகிய பல பொருள்களின் தற்கால விலைப்பருவம் வருமாறு. |
| | III **புதினாலங்காரி** - கொழும்பு மார்கட்டில் சாமான்கள் விற்கும் விலைகள் |
| | IV **சன்மார்க்க போதினி** - தூமரத நாடகம். |
| பின்னிணைப்பு - 05 | கிடைக்கப்பெற்ற சில பத்திரிகைகளினது முகப்புத் தோற்றம். |

முதலாம் இயல்

# அறிமுகம்

## 1.1 ஆய்வு அறிமுகம்

> "The history of journalism is not linear, but a series of crisscrossing loops. The way in which these loops are constructed is witnessed in the struggles of a liberal vision of journalism as a crusading vocation against the different currents of skepticism and pragmatism in the media."[1]

இதழியல் வரலாறு நேர் சீராகப் பார்க்கக் கூடிய ஒரு வரலாற்றுப் பயணமல்ல என்பதனை Practicing Journalism values என்ற நூலின் அறிமுகத்தில் நளினி ராஜன் தெளிவாகக் குறிப்பிடுகின்றார். ஆனால், அந்தப் பயணத்தில் வெளிப்படுகின்ற புறச்சான்றுகளே அதனது பெறுமதிமிக்க வரலாற்றினைப் பெற்றுத்தருகின்றன. எனவே, இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைத்துறை வரலாறு பற்றி அறிவதற்கு

[1] Rajan Nalini., **Practicing Journalism Values**, Constraints Indian pvt ltd, Implications SAGE publications, New Delhi, 2005, P1.

அக்காலத்தின் சமூக, சமய, அரசியல் சூழ்நிலைகள் தொடர்பான புறச்சான்றுகளை இனங்கண்டு கொள்வது மிக முக்கியமாகின்றது.

ஒல்லாந்தர் ஆட்சிக்குட்பட்டிருந்த இலங்கையின் கரையோர பிராந்தியங்களை அகப்படுத்திய ஆங்கிலேயர் அதுவரை சுதேசியர் வசமே இருந்த கண்டி ராச்சியத்தையும் 1815இல் கைப்பற்றியதோடு முழு இலங்கையும் ஆங்கிலேயர் வசமாயிற்று. இவ்வாறு இலங்கை பிரித்தானியரின் குடியேற்ற நாடாக ஆனதிலிருந்து உள்ளூர் ஆட்சி முறையில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்தன.

இம்மாற்றங்களின் முதற்கட்டமாக 1831இல் அரசியல் சீர்திருத்தம் கொண்டு வரப்பட்டது. அதிலிருந்து இலங்கை சுதேசிகளுக்கான ஆங்கிலக் கல்வி, பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை, தபால், தந்தி, போக்குவரத்து முதலான வசதிகள் ஏற்பட்டதோடு இலங்கையின் சமூகப் பொருளாதார அம்சங்களிலும் மாற்றங்கள் உருவாகின. இக்காலகட்டத்தில் இங்கிலாந்திலும் பல மாற்றங்கள் நிகழ்ந்தேறின.

> ‘‘.... இங்கிலாந்து இக்கால கட்டத்திற் கல்வியிலும் பொருள் வளர்ச்சியிலும் செல்வாக்கிலும் உன்னத நிலையை அடைந்திருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டு அமெரிக்க, ஐரோப்பிய வரலாற்றிலே மாபெரும் நூற்றாண்டு எனக் கணிக்கப்படுகிறது. விஞ்ஞானத்தின் வியத்தகு முன்னேற்றத்தினால் தொழில் வளம் பெருகியது. புதிய பண்டங்களை விற்பனை செய்வதற்காக புதிய நாடுகளுடன் தொடர்பு கொள்ளவும் அவற்றினை அடிமைப்படுத்தவும் அவசியமேற்பட்டது. புதிய அரசியற் பொருளியற் சூழ்நிலைகள் புதிய தத்துவங்களையும் பொருளியல் கோட்பாடுகளையும் தோற்றுவித்தன. ஐரோப்பிய அரசுகள் மத்தியில் சுய நம்பிக்கையும், சாதனை வேட்கையும் மிகுந்து காணப்பட்டன.’’[2]

இந்நிலைமை இங்கிலாந்தின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த யாழ்ப்பாண சமூகத்திலும் பெருமாற்றத்தை ஏற்படுத்தியதை ஜெபநேசன் பின்வருமாறு விளக்குவார்:

[2] ஜெபநேசன், எஸ்., **இலங்கையிலே 19ஆம் நூற்றாண்டிலே தமிழர் சிந்தனை வளர்ச்சி,** யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை, 1992, ப.57.

"எனவே, 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உயிர்த் துடிப்பும் செயல் ஊக்கமும் நிறைந்த ஆங்கில அரசும் மரபு தழுவிய யாழ்ப்பாணச் சமூகமும் ஒன்றையொன்று சந்தித்துக் கொண்டன."[3]

இதனால் இலங்கையின் சமூக, அரசியல், பொருளாதார அம்சங்களிலும் பெரும் தாக்கம் உருவாகியது. இலங்கைச் சுதேசிகள் ஆங்கிலத்தைக் கற்பதற்கும் அதனூடாக அரச தொழில்வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வதற்குமான வழிவகைகளை ஏற்படுத்தியது. அதே நேரம் இலங்கையில் தமிழ்ப் பேசும் சமூகத்தினரிடையே விழிப்புணர்வு ஏற்படவும் பிரித்தானிய ஆட்சி முறைமை வழிவகுத்தது. இச்சூழ்நிலை தமிழகத்திலும் பார்க்க இலங்கையிலே அதிக மாற்றத்தை ஏற்படுத்தியது. குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்திலே ஏற்பட்ட இச்சூழ்நிலை 19ஆம் நூற்றாண்டிலும் அதற்குப் பின்னரும் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட வழிசமைத்தது.[4]

இலங்கைச் சுதேசிகளின் சமூக மாற்றத்தில் கிறிஸ்தவ மிஷனரிகள் அதிக செல்வாக்குச் செலுத்தின. பிரதானமாக அவற்றினூடாகவே யாழ்ப்பாண சமூகம் விழிப்புப் பெறத் தொடங்கியது. யாழ்ப்பாணத் தமிழ் சமூகம் எழுத்து, வாசிப்பு முதலான விடயங்களில் அக்கறை காட்டத் தொடங்கிற்று. இக்கால கட்டத்திலே எழுத்தறிவுடைய சமூகத்திற்கான அச்சு ஊடகங்களின் வருகை தவிர்க்க முடியாததாகியது.

ஈழத்துச் சமூக வளர்ச்சியின் அடிப்படை உந்து சக்தியாக அமைவது அச்சியந்திரத்தின் வருகையாகும். ஒல்லாந்தர் காலத்திலேயே இலங்கையில் அச்சியந்திரம் பயன்பாட்டுக்கு வந்துவிட்டாலும், அக்காலத்தில் அது மிஷனரிகளினதும் மேலைத்தேய நிறுவனங்களினதும் தேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்த அனுமதிக்கப்பட்டிருந்தது. இதனால் அச்சியந்திரத்தின் பயன்பாடு பெரும்பாலும் கிறிஸ்தவ சமூக பிரசாரத்தோடு மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருந்தது. இவ்வாறு

---

3 மேற்படி நூல், ப.57.

4 கைலாசபதி, க., **ஈழத்து இலக்கிய முன்னோடிகள்,** மக்கள் வெளியீடு, சென்னை, 1986, ப.14.